இந்திய உயர் ஸ்தானிகராலயம்
கொழும்பு

ஊடக அறிக்கை

மீன்பிடித் துறை சார் அதிகாரிகளுக்காக மின்சார சக்தியில் இயங்கும் மோட்டார் சைக்கிள்களை வழங்கும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் இந்தியா இலங்கை கைச்சாத்து

மீன்பிடித் துறை சார் அதிகாரிகளுக்காக மின்சார சக்தியில் இயங்கும் 430 மோட்டார் சைக்கிள்களை வழங்கும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா மற்றும் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சின் செயலாளர் டாக்டர் பி கே கொலிடா கமல் ஜினதாச ஆகியோர் கைச்சாத்திட்டனர். கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் கௌரவ இராமலிங்கம் சந்திரசேகர் அவர்கள் முன்னிலையில் குறித்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

2. இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கையின் அடிப்படையில் முன்னெடுக்கப்படும் இந்த திட்டத்துக்காக, இந்திய அரசாங்கம் 265 மில்லியன் இலங்கை ரூபாவை நன்கொடையாக வழங்கவுள்ளது. இந்த நிதி, கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம், இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அதிகார சபை (NAQDA) மற்றும் தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகமை (NARA) உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களின் கள அதிகாரிகளுக்கு மின்சார மோட்டார் சைக்கிள்களை வழங்குவதற்காகப் பயன்படுத்தப்படும்.

3. இந்த மின்சார மோட்டார் சைக்கிள்களை பணிகளுக்காக வழங்குவது, மீன்வளத்துறை அதிகாரிகளின் செயற்பாட்டுத் திறன், வினைத்திறன் மற்றும் கள மட்டத்திலான பிரசன்னத்தை மேம்படுத்தும். துரிதமான பதிலளிப்பு மற்றும் மீன்பிடி சமூகங்களுடன் தொடர்புகளை எளிதாக்குதல் ஆகியவற்றின் மூலம், இலங்கை முழுவதும் பொதுச் சேவைகளை வழங்குவதில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதனை இது இலக்காக கொண்டுள்ளது. அத்துடன், இலங்கை ஜனாதிபதி அதி மேதகு அநுர குமார திசாநாயக்க அவர்கள் முன்னெடுக்கும் 'தூய இலங்கை' (Clean Sri Lanka) திட்டத்தின் கீழ், சுற்றுச்சூழல் ஸ்திரத்தன்மை என்ற இலக்கை அடைவதற்கும் இந்த முயற்சி முக்கிய காரணியாக பங்களிப்பு வழங்குகின்றது.

4. இலங்கை மக்களின் தேவைகளையும், இலங்கை அரசாங்கத்தின் முன்னுரிமைகளையும் அடிப்படையாகக் கொண்ட, இந்தியாவின் மக்களை இலக்காக கொண்ட அபிவிருத்தி ஒத்துழைப்புத் திட்டங்கள், நாட்டின் 25 மாவட்டங்களிலும் உள்ள மக்களின் நாளாந்த வாழ்வில் குறிப்பாக வீடமைப்பு, சுகாதாரம், கல்வி, மீன்வளம், போக்குவரத்து, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி,

வாழ்வாதார உதவிகள் மற்றும் விவசாயம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றன.

****

கொழும்பு
30 ஒக்டோபர் 2026